## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-3 - ஓராயிரம்

**(எம்பெருமான் 'நீர் விரும்பியதை எல்லாம் தரவல்ல நாராயணனன்றோ நான்' என்று தன் பேருறவைக் காட்ட, ஆழ்வார் அவன் சீலத்தில் ஈடுபட்டுப் பேசுதல்)**

3579 * ஓராயிரமாய் * உலகேழ் அளிக்கும் *
பேராயிரம் கொண்டதோர் * பீடுடையன் **
காராயின * காளநன் மேனியினன் *
நாராயணன் * நங்கள் பிரான் அவனே 1

3580 அவனே அகல்ஞாலம் * படைத்திடந்தான் *
அவனே அஃது உண்டுமிழ்ந்தான் * அளந்தான் **
அவனே அவனும் * அவனும் அவனும் *
அவனே மற்றெல்லாமும் * அறிந்தனமே 2

3581 அறிந்தன வேத * அரும்பொருள் நூல்கள் *
அறிந்தன கொள்க * அரும்பொருள் ஆதல் **
அறிந்தனர் எல்லாம் * அரியை வணங்கி *
அறிந்தனர் * நோய்கள் அறுக்கும் மருந்தே 3

3582 மருந்தே நங்கள் * போக மகிழ்ச்சிக்கு என்று *
பெருந்தேவர் குழாங்கள் * பிதற்றும் பிரான் **
கருந்தேவன் எம்மான் * கண்ணன் விண்ணுலகம் *
தரும் தேவனைச் * சோரேல் கண்டாய் மனமே! 4

3583 மனமே! உன்னை * வல்வினையேன் இரந்து *
கனமே சொல்லினேன் * இது சோரேல் கண்டாய் **
புனம் மேவிய * பூந்தண்துழாய் அலங்கல் *
இனமேதும் இலானை * அடைவதுமே 5

3584 அடைவதும் அணியார் * மலர்மங்கை தோள் *
மிடைவதும் * அசுரர்க்கு வெம்போர்களே **
கடைவதும் * கடலுள் அமுதம் * என் மனம்
உடைவதும் * அவற்கே ஒருங்காகவே 6

3585 ஆகம் சேர் * நரசிங்கம் அதாகி * ஓர்
ஆகம் வள்ளுகிரால் * பிளந்தானுறை **
மாக வைகுந்தம் * காண்பதற்கு * என் மனம்
ஏகம் எண்ணும் * இராப்பகல் இன்றியே 7

3586 இன்றிப் போக * இருவினையும் கெடுத்து *
ஒன்றி ஆக்கை புகாமை * உய்யக் கொள்வான் **

நின்ற வேங்கடம் * நீள்நிலத்து உள்ளது *
சென்று தேவர்கள் * கைதொழுவார்களே 8

3587 தொழுது மாமலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
எழுதும் என்னும் இது * மிகையாதலில் **
பழுதில் தொல்புகழ்ப் * பாம்பணைப் பள்ளியாய்! *
தழுவுமாறு அறியேன் * உன தாள்களே 9

3588 தாள தாமரையான் * உனதுந்தியான் *
வாள்கொள் நீள்மழுவாளி * உன்னாகத்தான் **
ஆளராய்த் தொழுவாரும் * அமரர்கள் *
நாளும் என் புகழ்கோ * உன சீலமே? 10

3589 * சீலம் எல்லையிலான் * அடி மேல் * அணி
கோல நீள் * குருகூர்ச் சடகோபன் ** சொல்
மாலை ஆயிரத்துள் * இவை பத்தினின்
பாலர் * வைகுந்தம் ஏறுதல் பான்மையே 11

**அடிவரவு:** ஓர் அவனே அறிந்தன மருந்தே மனம் அடை ஆகம் இன்றி
தொழுது தாள் சீலம் மை